

திருவண்ணாமலை மேற்கு ஒன்றியத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, கிராமம், கிராமமாக வாக்கு சேகரித்து உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகளும், கூட்டணி இயக்க நிர்வாகிகள் உள்ளனர்.



அருப்புக்கோட்டை நகரப் பகுதியில் வார்டு வார்டாகச் சென்று அருப்புக்கோட்டை தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மக்களை நேரில் சந்தித்து வாக்குகளை சேகரித்தார். உடன் முன்னாள் நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி பங்கேற்றனர்.

### தொகுதி மறுவரையறை மசோதாவிற்கு எதிராக

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோபம் ஒவ்வொரு தமிழனின் கோபம்!

## பழனி கூட்டத்தில் சு.வெங்கடேசன் எம்.பி. பேச்சு!

திண்டுக்கல் ஏப்.18–

நாட்டின் தொகுதி மறுவரையறை தொடர்பாக ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்திருக்கிற மசோதாவிற்கு எதிராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வருகிற கோபம், தமிழ்நாட்டின் ஒவ்வொரு தமிழனுக்குமான கோபம் என்று மதுரை மக்களவை உறுப்பினர் சு. வெங்கடேசன். எம்.பி. பேசினார்.

செவ்வாய்கிழமை பேருந்து நிலையம் அருகில் பழனி தொகுதி சிபிஎம் வேட்பாளர் என்.பாண்டிக்கு ஆதரவாக நடைபெற்ற வாக்கு சேகரிப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அவர் மேலும்பேசியதாவது.

முதலமைச்சர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். ஒன்றிய அரசின் அறிவிப்பு நாட்டையே பதட்டமடையச் செய்துள்ளது. இதனைக் கண்டித்து தான் முதல்வர் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளார். இவ்வளவு கோபத்தோடு தமிழக முதல்வர் இந்த 5 ஆண்டில் வேறு அறிக்கை வெளியிட்டு இருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். அவர் வெளியிட்டு இருக்கிற



அந்த அறிக்கையில் இருக்கிற கோபம், ஒரு கட்சியினுடைய தலைவருக்கு, ஒரு முதலமைச்சருக்கான கோபம் அல்ல. தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு தமிழனுக்கும் வர வேண்டிய கோபம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாளைய மறுதினம் நாடாளுமன்றத்தினுடைய கூட்டத்துடன் நடைபெற இருக்கிறது.

பெரிய மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளத்திலும் தேர்தல் நடக்கிற பொழுது மக்களவை உறுப்பினர்கள் மாநிலங்களவை உறுப்பினர்கள் அந்த மாநிலத்திலே தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டாமா? மக்களை சந்திக்க வேண்டாமா? அப்படி இருக்கிற பொழுது இவ்வளவு அவசரமாக இந்த கூட்டத் தொடரை ஏன் நடத்த வேண்டும் . தேர்தலுக்குப் பிறகு 29 ஆம் தேதிக்கு பிறகு அந்த கூட்டத்தை நடத்தலாம் என்று எதிர் கட்சி எம்.பி.க்கள் எல்லோரும் சொல்லிப் பார்த்தோம். மோடி கேட்கவில்லை.

**தமிழ்நாட்டுக்கெதிராக அநீதிகள் இழைத்த மோடி!**

இந்தியாவில் அவரை உறுதியுடன் எதிர்க்கிற 2 முக்கியமான மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கங்கம். இந்த மாநிலங்களில் எல்லாம் எந்தெந்த வகையில் எல்லாம் அநீதி இழைக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் அநீதிகள் இழைக்கப்பட்டுவிட்டாச்சு. இந்த மாநில எம்.பி.க்கள் பாராளுமன்றத்திற்கு வந்தால் என்ன? வராவிட்டால் என்ன ? என்பது மட்டுமல்லஇ தமிழ்நாட்டின் மக்களவை உறுப்பினர்கள் தமிழ்நாடு புதுச்சேரியைச் சார்ந்த 40 உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்குப் போனால் இங்கே தேர்தல் வேலை பாதிக்கப்பட்டால். அது பாஜகவிற்கு நல்லது என்று நினைக்கிறார். ஒருவேளை தேர்தல் வேலை பாதிக்கப்படக்கூடாது என்று நாங்கள் எல்லாம் இங்கே தேர்தல் வேலை பார்த்தால்இ அங்கே வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. எனவே மோடி வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறார். அவர் கண்ணில் மண்ணைத் தூவுவதல்ல. அவர் கனவை அடியோடு நிறுத்துவது தான் திமுக தலைமையிலான இந்த கூட்டணியினுடைய ஒவ்வொரு எம்பிக்களினுடைய பணி.

**அரசியல் சாசனத்தை சிதைக்க தீவிரம்!**

நாளைய மறுதினம் அரசியல் சாசன சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப் போகிறார்கள். நமது அரசியல் சாசனத்தின் பன்முகத் தன்மையை பார்த்தாலே அண்ணலின் பங்குக்கு இணையான பங்கு வேறு யாருக்கும் இல்லை. உலகத்தில் இப்படி ஒரு அரசியல் சாசனம் கிடையாது உலகத்தில் கிடையாது. அந்த அரசியல் சாசனத்தை எப்படியாவது குழைத்து விட வேண்டும், மாற்றிவிட வேண்டும், அழித்துவிட வேண்டும், சிதைத்து விட வேண்டும் என்று 24 மணி நேரமும் பாஜகவும், சங் பரிவார கும்பலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் வாழும் 140 கோடி மக்களும் இந்த அரசியல் சட்டம் எனக்காக சட்டம். இது எனக்கான தேசம். இது எனக்கான உரிமை இது என்று நம்புகிற ஒரு அச்சாணி அரசியல் சாசனம்.

உலகத்தில் எந்த அரசியல் சாசனம் இதற்கு நிகர் கிடையாது . எனவே தான் அண்ணல் அம்பேத்கருடைய இன்றைய பிறந்த நாளிலே இந்த அரசியல் சாசனத்தை சிதைக்கிற வேலையை பாஜக கும்பல் செய்கிறது. 131 வது சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப் போகிறார்கள் . அது என்ன ? ஏற்கனவே பெண்களுக்கு சட்டமன்ற நாடாளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை கொடுக்கிற அரசியல் சாசன சட்ட திருத்தம் 13வது சட்ட திருத்தம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுஇ முடிந்து விட்டது. இப்பொழுது மகளிர் பெண்கள் திருத்தம் என்ற பெயரில் ஒரு சட்ட திட்டத்தை கொண்டு வர இருக்கிறார்கள் . உண்மையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட பிரச்சனை அல்ல. அது ஏற்கனவே முடித்து விட்ட து. இப்பொழுது பிரச்சனைஅதுவல்ல.

தமிழ்நாட்டின் தலையில் தொங்கிக் கொண்டிருக்கிற கத்தியை தமிழ்நாட்டின் .கழுத்தில் இறக்குகிற பிரச்சினை. தென்னிந்தியாவின் தலையிலே தொங்கிக் கொண்டிருக்கிற கத்தியை தென்னிந்தியாவின் கழுத்திலே இறக்குகிற பிரச்சினை. கடந்த 50, 60 ஆண்டு காலம் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றியது மூலம் மக்கள் தொகையின் விகிதத்தை கட்டுக்குள் வைத்து இருக்கிறது . உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம்இ ராஜஸ்தானம் ஆகிய ஹிந்தி பேசுகிற மாநிலங்களில் மக்கள் தொகை இரண்டு மடங்கு தாண்டி நிற்கிறது.

**காலனி நாடுகளாக தென் மாநிலங்கள்!**

ஏறக்குறைய அரசியல் அனாதையாக தென்னிந்திய மாநிலங்கள் மாறும். நீங்கள் என்ன வேண்டுமானாலும் கத்திக்கொள்ளுங்கள், ஆனால் நாங்கள் கொண்டு வருகிற எந்த மசோதாவையும் நிறைவேற்ற தமிழ்நாட்டு எம்.பி.க்கள், தென்னிந்திய எம்.பி.க்கள் தேவையில்லை. என்று அவர்கள் வேலையை அதிகாரப்பூர்வமாக செய்ய அவர்கள் துணிந்து விட்டார்கள். ஒற்றை இந்தியாவுக்குள் காலனி நாடுகளாக தென்னிந்திய மாநிலங்கள் மாறுகிற அபாயம் உள்ளது.

முதல்வர் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் 1950, 60களில் என்ன போர்க்களத்தை தமிழ்நாடு சந்தித்ததோ அதை போன்ற ஒரு போர்க்களத்தை நீங்கள் சந்திப்பீர்கள் என்று சொல்லி இருக்கிறார். 70 ஆண்டு காலம் எங்கள் முன்னோர்கள் இந்த மண்ணில் ஒன்றிய அரசுக்கு எதிராக நடத்திய போராட்டங்களால் தான் இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றி வைத்திருக்கிறோம். தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் திமுக தலைமையிலான கூட்டணி யில் பங்கு வகிக்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அதில் பங்கு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் நலனுக்காக எந்த பங்கையும் செலுத்தாத ஒரு கட்சி இருக்கிறது என்றால் அது பா.ஜ.க. தான்.

தோழர் பாண்டிக்கு வாக்களியுங்கள் என்று நாங்கள் கேட்பது பாண்டிக்காக அல்ல. பழனிவாழ் வாக்காள பெருமக்களுக்காக. எனவே இங்கே 70 ஆண்டு காலம் தமிழ்நாட்டை இவ்வளவு சிறப்பாக வளர்ந்து வைத்த தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை , முடக்குகிற வேலையை பாஜக செய்திருக்கிறது.

பா.ஜ.க.வின் இந்த செயலை எடப்பாடி பழனிச்சாமி ஆதரிக்கிறார். தொகுதி மறு வரையறை மசோதாவில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் எந்த வகையிலும் மாற்றம் செய்யப் படமாட்டாது என்று சொன்ன மோடியின் வாக்குறுதிகள் என்னாயிற்று. தொகுதி மறுவரையறை குறித்து ஆணையம் தான் இறுதி முடிவெடுக்கும். உச்சநீதிமன்றமும் கூட இதில் தலையிட முடியாது. ஆணையத்தின் முடிவே இறுதியானது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆணையத்திற்கு எதிராக நாம் நீதிமன்றத்தை நாட முடியாது. எனவே பாஜக ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கும், தென்னிந்தியாவிற்கும் எதிராக ஒரு மிகப்பெரிய அநீதியை இழைத்திருக்கிறது. இதற்கெதிராக தமிழ்நாடும், தென்னிந்தியாவும் மாறும். நுடைபெற இருக்கிற சட்ட மன்றத் தேர்தல் அந்த போராட்டத்திற்கு எதிரான இன்னொரு களமாக மாறும். இந்த சட்டமசோதாவிற்கு எதிராக நானும், திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தமும், திமுக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் மிக வலிமையாக குரல் கொடுப்போம் என்று சு.வெங்கடேசன் எம்.பி. பேசினார்.



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன் கீழப்பாவூர் மத்திய ஒன்றியம் துவரங்காடு கிராமத்தில் பிரச்சாரத்தை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் தலைமையில் ஒன்றிய பொறுப்பாளர்கள் சேசுராஜன், சுப்பிரமணியன்,கோமதிநாயகம் ஆகியோர் முன்னிலையில் துவக்கி தெருத் தெருவாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.

### தொகுதி மறுவரையறையால்

# தமிழ்நாட்டிற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்படும்!

## உத்திரப்பிரதேசத்திற்கு கூடுதல் தொகுதிகள்!

புதுடெல்லி, ஏப்.18–

மக்கள் தொகை படி, தொகுதி மறுவரையறை செய்யப்படுவதால் தமிழ்நாட்டிற்கு பெரும் இழப்பு ஏற்படும் என்பது புள்ளி விவர கணக்கின் படி தெரியவந்துள்ளது. அதேநேரத்தில் உத்தரபிரதேசத்திற்கு தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் புள்ளி விவரங்கள் வெயிட்டுள்ளது.

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை, மக்கள் தொகையின் அடிபடையில் தொகுதி மறுவரையறை செய்து 850 ஆக உயர்த்த ஒன்றிய பாஜக அரசு முனைப்பு காட்டி வருகிறது. இதற்கு திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் நாடாளுன்றத்தில் குறைக்கப்படும் என்பதால், திமுக மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை உண்மையாக்கும் விதமாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆங்கில நாளிதழ் புள்ளி விவரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தமிழ்நாட்டிற்குதான் அதிகபடியான இழப்பு ஏற்படும் என்றும், உத்தர பிரதேசத்திற்கு கூடுதல் தொகுதிகள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 மக்கள் தொகையின்படி, மக்களவைத் தொகுதிகள் 850ஆக உயர்த்தப்படும் போது மக்களவையில் தமிழ்நாட்டிற்கான பிரதி நிதித்துவம் 1.2 சதவீதம் குறைக்கப்படும்.

அதே நேரத்தில் உத்தரபிரதேசத்தின் பிரதிநிதிதுவம் 1.7 சதவீதம் உயரும் என்பதும் வெட்ட வெளிச்சமாக தெரிய வந்துள்ளது. அதாவது தற்போது தமிழ்நாட்டிற்கு 39 தொகுதிகள் உள்ள நிலையில், அது 51 ஆக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், சதவீதமாக பார்க்கும்போது மக்களவையில் தமிழ்நாட்டின் பங்கு 7.2 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைகிறது.

இதேபோல், கேரளாவில் 20ல் இருந்து 23–ஆக தொகுதிகள் உயர்த்தப்பட்டு, அதன் பங்கு 3.7ல் இருந்து 2.7 சதவீதமாகவும்,

ஆந்திரா, தெலுங்கானாவில் 42ல் இருந்து 59–ஆக உயர்த்தப்பட்டு, அதன் பங்கு 7.7ல் இருந்து 6.9 சதவீதமாகவும்,

ஒடிசாவில் 21–இல் இருந்து 29–ஆக உயர்த்தப்பட்டு 3.9ல் இருந்து 3.4 சதவீதமாக அதன் பங்கும் குறையும்.

அதே நேரத்தில் ஏற்கனவே, அதிக தொகுதிகள் உள்ள உத்தரபிரதேசத்தின் தொகுதிகள் 80ல் இருந்து 140 ஆக உயர்ந்து, அதன் பங்கும், 14.7 சதவீதத்தில் இருந்து 16.5 சதவீதமாக உயருகிறது.

பீகாருக்கு 7.4ல் இருந்து 8.6 சதவீதமாக உயர்ந்து 40 தொகுதியில் இருந்து 73 தொகுதியாக அதிகரிக்கப்பட உள்ளது.

ராஜஸ்தானின் தொகுதி 25ல் இருந்து 48ஆக அதிகரிக்கப்பட்டு, மக்களவையில் பங்கு 4.6ல் இருந்து 5.6 சதவீதமாகவும்,

29 தொகுதிகள் கொண்ட மத்தியபிரதேசத்திற்கு 51 தொகுதிகள் வழங்கப்பட்டு, அதன் பங்கு 5.3ல் இருந்து 6 சதவீதமாகவும்,

மகாராஷ்டிராவின் தொகுதி 48ல் இருந்து 79 ஆக உயர்த்தப்பட்டு, பங்கு 8.8ல் இருந்து 9.3 சதவீதமாகவும் உயர்த்தப்பட உள்ளது.

இதன்படி, வடமாநிலங்களின் பிரதிநிதித்துவம் மக்களவையில் 22.1ல் இருந்து 25.1 சதவீதமாக உயரும் நிலையில், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் 20.1ல் இருந்து 18 சதவீதமாக குறையும் என்பதும் இந்த புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி.

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மேலூர் வடக்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்

# வாச்சாம்பட்டி ஏ.மாணிக்கம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

மதுரை, ஏப்.18–

மதுரை வடக்கு மாவட்டம், மேலூர் வடக்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் கீழவளவு சேகரம் வாச்சாம்பட்டியைச் சேர்ந்த ஏ.மாணிக்கம் அவர்கள் நேற்று முன்தினம் (16.4.2026) நள்ளிரவு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். அன்னாரது நல்லடக்கம் இன்று (18.4.2026 சனிக்கிழமை) அன்று மாலை 3 மணி அளவில் வாச்சாம்பட்டியில் நடைபெறும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

**ஏப்ரல் 18 (2005)**



**கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.**

**1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

**ஏப்ரல் 18 (2019)**



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.**

**மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் அனைத்திலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**